# சென்னை தலைமைச் செயலகத்தில் பொங்கல் விழா!

# தலைமைச் செயலக அலுவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் வாழ்த்து!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.1.2026 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் வைத்து, தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.1.2026 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் 49 ஆவது சென்னை புத்தகக் காட்சி 2026 ல் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை 14.1.2026 அன்று பார்வையிட்டார்.

### தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில்

## ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப் பணிகள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 18-**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2026 அன்று தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,096 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் தற்போது 3.56 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 37.44 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 31 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

**ஆவின் நிறுவனத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணி களின் விவரங்கள்**

பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தற்போது அதிகரித்து வரும் கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடியில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன உற்பத்தி ஆலை;

கோடை மற்றும் வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு வருடம் முழுவதும் தரமான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் சிறப்பு பகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் 6.72 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 25 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை;

ஆவின் விற்பனை அதிகரிக்கவும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 21.57 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் 10,000 லிட்டர் நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

பாலின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் திருவண்ணாமலை, கடலூர், கரூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடங்கள்;

என மொத்தம் 80.62 கோடி ரூபாய் செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ. ஜான் லூயிஸ், இணை நிர்வாக இயக்குநர் திருமதி ச.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கரூர் மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் பயிலும்

## 10, 12ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு வினா - விடை புத்தகங்கள்!

### கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்!

*கரூர், ஜன. 18 -*

கரூர் மாவட்டத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு 17,374 பேருக்கும் வினா - விடை தொகுப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. கரூர் மாநகராட்சி பகுதியில் தாந்தோணி மலை அரசு மேல்நிலைப்பள்ளி, கரூர் மாநகராட்சி குமரன் உயர்நிலைப்பள்ளி, கரூர் கோட்டைமேடு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, வாங்கப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி, பெரிய குளத்துப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி, சி எஸ் ஐ பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு ஆயிரம் பேருக்கு வினா - விடை தொகுப்பு புத்தகங்களை கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி கூறுகையில், திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து மாணவர்களுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி உள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 10ம் வகுப்பு 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வினா - விடை தொகுப்பு புத்தகம் செந்தில் பாலாஜி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தொகுப்பு புத்தகம் கரூர் மாவட்டத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு 17,374 பேருக்கும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது என்றார்.



திருச்சியில் தில்லை நகரில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு அவர்கள் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் சரவணன் மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், நகர பொறியாளர் சிவபாதம் , டோல்கேட் சுப்பிரமணி, பகுதி செயலாளர்கள் தமால் முஸ்தபா, மோகன்தாஸ், வழக்கறிஞர் கவியரசன், மணிபாரதி உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள், பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.